
# புத்தகபிரியர்களின் சோலை

## ஈஸ்வரி நூலகம்






ஒரு குறுகலான லாயட்ஸ் தெருவில்,
(தற்போது அவ்வை ஷண்முகம் சாலை)
ஒரு அடுக்கு மாடி குடியிருப்பின் தரைதளத்தில்
வசிக்கிறார் நகரின் மாணிக்கங்களில் ஒருவர்.
தெருவைக் கடந்து எதிர்புறம் சென்று இந்த
குடியிருப்பை நோக்கி சிறிது மேலே பார்த்தால்,
'ஈஸ்வரி நூலகம்' என ஒரு பலகை இருக்கும்.
இங்கு தான் சென்னையின் பழமையான
நூலகத்தின் தலைமை செயலகம் இயங்குகிறது.
இந்த அறையின் பரப்பளவு சிறிது விலாசமாகவும்,
நிறைய அலமாரிகளில் புத்தகங்கள்
அடுக்கப்பட்டு காணப்படுகிறது.

எனக்குள் பல கேள்விகள்!! எவ்வளவு பழமையான
இடம் இது? என்ன வகை புத்தகங்கள் இருக்கும்?
ஈஸ்வரி என்பது யாருடைய பெயர்?
இந்த நூலகத்தை ஆரம்பித்த திரு. பழனி,
அவரின் மகன்கள், பேரன் ஆகியோர்
என் கேள்விகளுக்கு பதில் அளிக்க தயாராக
இருந்தனர். இது இப்போது ஒரு குடும்ப
நிறுவனமாக உருவாகி உள்ளது.

இந்த நூலகம் 64 வருடங்களுக்கு முன் 1955ல்
திரு.பழனி தன் 16வது வயதில்
ஆரம்பிக்கப்பட்டதாகும். இதை திறப்பதற்கு முன்,
இவர் பழைய தாள் கடை ஒன்றை நடத்திக் கொண்டு.
பழைய புத்தகங்கள், செய்தி தாள்களை வாங்கி,
விற்பதை செய்து கொண்டிருந்தார்.
வார, மாத இதழ்களின் மீது இவருக்கு இருந்த
ஈடுபாடு வளர வளர, இவர் இந்த புத்தகங்களை
கட்டமைக்கத் துவங்கினார். 50 - 100 புத்தகங்கள்
சேர்ந்தவுடன், படிக்கும் ஆர்வம் உள்ளவர்களுக்கு
குறைந்த கட்டணத்திற்கு (4 அணா, 2 அணா,
1 அணா) படிக்கத் தந்தார்.
சிறிது காலம் பிறகு இதுவே அவரின் முதன்மை
வியாபாரமாக மாறியது.


அவர் இந்த நூலகம் ஆரம்பித்த போது,
சுற்றுவட்டாரத்தில் பெரிதாக வேறு நூலகங்கள்
இல்லை. சிறிய நிலையில் ஆரம்பித்த இந்த
நூலகத்துக்கு, மூர் மார்க்கெட்டிலிருந்து புத்தகங்கள்
வாங்கி, மிதிவண்டியில் கொண்டு வருவார்.
அவருடய நண்பர் ஒருவர், மிகவும் பிரபலமான
புத்தகங்கள், மக்கள் விரும்பிப்படிக்கும்
புத்தகங்களை சொல்லி அதை நூலகத்தில்
வைக்கும்படி சொன்னார். சிறிது காலத்துக்கு
பிறகு பதிப்பகத்திலிருந்தே நேரடியாக புத்தகங்கள்
வாங்க ஆரம்பித்தார் திரு.பழனி. முதலில்
வந்த வாடிக்கையாளர்கள் அனைவரும்
பெரியவர்களே. பின் பிள்ளகளுக்கும் ஆர்வம்
வந்து வர ஆரம்பித்தவுடன், அவர்களுக்கான
புத்தகங்கள், பள்ளி, கல்லூரிக்கு தேவையான
புத்தகங்கள், ஆங்கில புத்தகங்கள் என
நூலகத்தை விரிவுபடுத்தினார்.

திரு. பழனியின் குலதெய்வம் கடலூர் நாகாத்தம்மன்
கோவிலில் உள்ள ஈஸ்வரி அம்மன் ஆகும்.
அந்த அம்மன் பெயர் தான் நூலகத்துக்கு
வைக்கப்பட்டது. அது மட்டுமன்றி, பக்தி கொண்ட
நன்றி உணர்ச்சியில், அந்த கோவிலை சீர் படுத்தி
அழகுற செய்ய நிறைய பணம் செலவு
செய்துள்ளார். இவர் முருக பக்தரும் கூட.
அதனால் தான், இந்த நூலகத்தின் பிற
கிளைகள் செந்தில், முருகன், குமரன்
என பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்த முதல் பிரதானக் கிளைத் திறந்து
10 வருடங்களுக்குப் பிறகு இன்ன பிற கிளைகள்
திறக்கப்பட்டு இன்று 10 நூலகக் கிளைகள் உள்ளன.
இந்த கிளைகள் அனைத்தும் நிறுவப்பட்ட பின்,
திரு. பழனியின் பிள்ளைகள் புத்தகங்கள் வாங்கி,
அதை தேவைப்படும் நூலகத்தில் கொண்டு
சேர்க்கும் பொறுப்பை தாமே ஏற்றுக் கொண்டனர்.
10 கிளைகளில், மிகவும் பிரபலமான கிளை,
அடையாரில் உள்ள முருகன் நூலகமாகும்.
ராயப்பேட்டையில் உள்ள பிரதானக் கிளையில்
ஏறத்தாழ 65,000 புத்தகங்கள் உள்ளன.
ஒவ்வொரு அலமாரியிலும் இரண்டு வரிசையில்
புத்தகங்கள் அடுக்கி இருக்கும். ஒரு புத்தகத்தைக்
கண்டு பிடிப்பது கஷ்டமே கிடையாது.


10 கிளைகளும் ஒன்றோடொன்று
வலைப்பின்னியிருப்பதால், பிரதான
கிளையிலிருந்தே எல்லா கிளைகளயும்
நிர்வகிக்க முடியும். பிரபலமான புத்தகமும்
கிடைக்கும். மிகவும் விரும்பிப் படிக்கப்படும்
புத்தகமும் கிடைக்கும். புத்தகங்கள்
வெளியிடப்பட்டவுடனேயே, வாங்கப்பட்டு
இங்கு சேர்க்கப்பட்டு விடும். ஒரு மாதத்திற்கு
சுமார் 1 முதல் 1.25 லட்சம் புத்தகங்கள் அனைத்து
கிளைகளுக்கும் சேர்த்து வாங்கப்படுகிறது.

புது புது கிளைகள் திறப்பது, அந்தந்த பகுதியில்
இருக்கும் வாசிப்பவர்களின் எண்ணிக்கையைப்
பொறுத்தே ஆகும். வீட்டுக்கே புத்தகம் கொண்டு
கொடுக்கும் சேவையும் இந்த நூலகம் செய்கிறது.
இருக்கும் புத்தகங்களின் தொகுப்பைக் காட்டி,
வேண்டிய புத்தகம் தேர்ந்தெடுக்க இன்றைய
வலைதளம் மிகவும் உதவியாக உள்ளது.



இது மட்டுமன்றி, குடியிருப்புகளில் நூலகம்
அமைக்கும் வேலையை செய்கிறது. 500 - 600
வீடுகள் இருக்கும் இடத்தில் ஒரு முழுமையான




நூலகம் இருக்கும். DLF, Casa Grande, Metro Zone ஆகிய இடங்களிலும், மைலாப்பூர், காந்தி நகர் போன்ற கிளப்களிலும் இவர்கள் நூலகம் அமைத்துள்ளனர்.

இங்கு வரும் உறுப்பினர்கள் 5 முதல் 90 வயதுக்கு உட்பட்டவர்கள். இரண்டாம், மூன்றாம் தலைமுறையினரும் இங்கு புத்தகங்கள் எடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். மிகவும் விருப்பப்பட்டு படிக்கப்படும் மொழி தமிழ் மற்றும் ஆங்கிலமாகும். கொஞ்சம் தெலுங்கு வாசகர்கள் கூட உள்ளனர். குழந்தைகளுக்கான புத்தகங்கள் மிகவும் பிரசித்தமானவை. பிள்ளைகள் விரும்பி படிக்கும் எழுத்தாளர்கள் Geronimo Stilton, Enid Blyton, Hardy Boys, Percy Jackson ஆகும். ஆண் பிள்ளைகள் விரும்பி படிப்பது கற்பனை கதைகள். பெண் பிள்ளைகள் விரும்பி படிப்பது நகைச்சுவை கதைகளும், திகில் கதைகளும் ஆகும். 25 முதல் 50 வயது வரையினர் விரும்பி படிப்பது Mills & Boon புத்தகங்கள்.

பழைய வாசிப்பாளார்களின் ஆர்வம் குறைந்து புது புது வாசிப்பாளார்கள் வருகிறார்கள். துப்பறியும் நாவல்கள் படித்து கொண்டிருந்தவர்கள் இப்போது கற்பனை, திகில் கதைகள் என வாசிக்கின்றனர். ஒவ்வொரு மாதமும் 80 - 90 உறுப்பினர்கள் கிளைகளில் சேர்கின்றனர். ஈஸ்வரி, 'உயிரோட்டமுள்ள வீடு' என ஒரு புதிய திட்டம் கொண்டு வந்துள்ளது. படிக்கும் ஆர்வம் கொண்ட, தமக்கென நூலகம் அமைத்துக் கொள்ளத் தெரியாத இவர்களுக்கு, அவர்கள் வீட்டிலேயே ஒரு அலமாரியில் அவரவர் வயதுக்கேற்ப 50 - 70 புத்தகங்கள் அடுக்கிக் கொடுக்கிறது. அடுத்த மாதம் வேறு தொகுப்பு கொடுக்கும். இந்த வழியில் நிறைய வகை வகையாகப் புத்தகங்கள் படிக்கும் வாய்ப்பு கிட்டும்.

மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த திரு. பழனியின் பெயரன் 9 முதல் 5 வரை பணிக்கு செல்ல இஷ்டம் இல்லை என்றும், தன் தந்தையின் வியாபாரத்தை இன்னும் விசாலப்படுத்த உதவ வேண்டும் என விழைகிறார். சில வியாபார ரீதியான யுத்திகளும் அறிமுகப்படுத்தியுள்ளார்.
அங்கு வந்த காவல் அதிகாரி ஒருவர், அலமாரிகளில் உள்ள புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே, தான் வரலாற்று நாவல்கள் மாதத்திற்கு நான்கு எடுப்பதை வழக்கமாக கொண்டிருப்பதாகவும், இக்கால தலை முறையினர் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அதன் மூலம் இந்த நூலகமும் இன்னும் பல காலம் இருக்க வேண்டும் என்றும் சொல்கிறார். மேலும், படிப்பதற்கு நேரம் பார்க்க வேண்டாம்; வயது முக்கியம் அல்ல, எந்த வயதிலும், எப்போது வேண்டுமானாலும் படிக்கலாம் என்றும் சொல்கிறார்.

இவர்களின் எதிர்கால திட்டம், வீடு சென்று புத்தகம் கொடுப்பதை இன்னும் விரிவுப்படுத்தி பெரியதாக செய்ய வேண்டும் என்பது ஆகும். யாருக்கும் நூலகம் செல்ல நேரம் இல்லை. வீட்டுக்கு வந்து விநியோகப்படுத்தப்பட்டால் வசதியாக இருக்கும் என மக்கள் விரும்புகின்றனர். அதுவும் சமீபத்திய புத்தகங்கள் இருந்தால் இன்னும் சந்தோஷம். இதை செயல்படுத்துவதே அவர்களின் முக்கிய திட்டம் ஆகும். வாசிக்கும் பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்த விழையும் இவர்கள் உண்மையிலேயே சென்னை சாம்பியன் தான்.

சுபாஷிணி கோமேஸ்வரன்

